# வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : SC.No. 775/2023
## வழக்கு சாட்சி PW–7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஐயப்பன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மனோகரன் | தொழில் | : | தனியார் நிறுவன வேலை |
| கிராமம் | : | திருவாரூர் | வயது | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 25th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் திருவாரூரில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 சாமி எனது மாமனார். அ.சா.2 மாரிச்செல்வம் எனது மைத்துனர். அ.சா.3 முருகேசன் எனது சின்ன மாமா ஆவார். வழக்கு சம்பவ காலத்தில் எனது மனைவி கர்ப்பமாக இருந்தார். அதனால் நான் ஊர் திருவிழாவிற்காக எனது மனைவியை ஆயிரப்பேரிக்கு அழைத்து வந்தேன். 15.01.2023ம் தேதி, மாலை 06.30 மணியளவில் எனது மாமாவிற்கு எனது மச்சான் மகேஷ் போன் செய்தார். போனில், தன்னை எதிரிகள் அவர்களது வீட்டு வழியாக பைக்கில் போகும் போது, வேகமாக ஏன் பைக்கில் போகிறாய், என்று சொல்லி எதிரிகள் என் மச்சான் மகேஷை கன்னத்தில் அடித்து விட்டதாக கூறினார்.

அதன் பின்னர், எனது மாமா சாமி, மாரிச்செல்வம் ஆகியோர்களுடன் நானும் சேர்ந்து கொண்டு எதிரிகள் இருக்கும் வீட்டிற்கு சென்று விபரத்தை கேட்க போனோம். அப்போது, இரவு 08.15 மணியிருக்கும். எதிரிகள் அவர்களது வீட்டு வாசல் வெளிச்சத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது, எதிரிகளிடம் எனது மாமா சாமி "எதற்காக மகேஷை அடித்தீர்கள்" என்று கேட்டார். உடனே எதிரி சுரேஷ் "நீ எதுக்குடா கேட்கிற தேவடியா மவனே தாயோலி" என்று எனது மாமா சாமியை கெட்ட வார்த்தைகளால் பேசி விட்டு வேகமாக வீட்டிற்குள் எதிரிகள் சுரேஷ், தினேஷ் ஆகியோர்கள் சென்று அருவாளை எடுத்து வந்து எதிரி சுரேஷ் அருவாளை வைத்து எனது மாமா சாமியின் கன்னத்தின் இடது புறம் காதோடு சேர்த்து வெட்டினார். மற்றொரு வெட்டு வெட்டும்போது, எனது மாமா சாமி கையால் தடுத்ததால் அந்த வெட்டு அவரின் கழுத்தில் படாமல் அவரது தோள்பட்டையில் பட்டது.

எதிரி தினேஷ்குமார் அரிவாளால் எனது மச்சான் மாரிச்செல்வத்தை சரமாரியாக இடது கை மூட்டு, இடது கை, இடது கால் ஆகிய இடங்களில் வெட்டினார். மாரிச்செல்வம் வெட்டும் போது மயங்கி விழுந்து விட்டார். நானும், எனது மாமா சாமியும் மாரிச்செல்வத்தை தூக்க போனோம். அப்போது, எதிரி ராமைய்யா இரும்பு ராடை எடுத்து வந்து எனது மாமா சாமியின் தலையில் அடித்து விட்டார். உடனே எனது சின்ன மாமனார் முருகேசன் அங்கு வந்து விட்டார். அப்போது, எதிரிகள் சுரேஷ், தினேஷ் ஆகியோர்கள் சாமி, மாரிச்செல்வம் ஆகியோர்களை பார்த்து, "எங்கள் அம்மா, அப்பா வாழாததற்கு காரணமே நீங்கள் தான், இதற்கு அப்புறம் நீங்கள் எங்கள் வீட்டு பக்கம் வந்தால் உங்களை கண்ட துண்டமாக வெட்டி புதைத்திடுவோம்" என்று சொன்னார்கள்.

அதன் பின்னர் காயம்பட்ட எனது மாமா சாமியையும், மாரிச்செல்வத்தையும் ஒரு போக்கு ஆட்டோவில் நானும், எனது சின்ன மாமனார் முருகேசன், லிங்கத்துரை ஆகியோர்கள் சேர்த்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். இந்த சம்பவத்திற்கு முன்பாக இராமையாவிற்கும், அவரது மனைவி இலட்சுமிக்கும் இடையே 5 வருடத்திற்கு முன்பு குடும்பசண்டை இருந்து வந்தது. இராமையா என்பவர் எனது மாமா சாமி, சின்ன மாமா முருகேஷ், மச்சான் மகேஷ், எங்கள் தாத்தா காளி ஆகியோர் மீது வழக்கு கொடுத்திருந்தார்கள். ஊரில் உள்ளவர்கள் பேசி முடித்து இராமையாவையும், இலட்சுமியையும் சேர்த்து வைத்தார்கள். அதை மனதில் வைத்து தான் இந்த சம்பவத்தை எதிரிகள் செய்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.26 13:48:30 +0530

<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 775/2023</u>
<u>வழக்கு சாட்சி PW-8</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சவுந்தர்யா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சாமி | தொழில் | : | குடும்ப பொறுப்பு |
| கிராமம் | : | ஆயிரப்பேரிபுதூர் | வயது | : | 25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 25th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது திருவாரூரில் குடியிருந்து வருகிறேன். எனது சொந்த ஊர் ஆயிரப்பேரிபுதூர். நான் குடும்ப பொறுப்பு வகித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 சாமி எனது அப்பா. அ.சா.2 மாரிச்செல்வம் எனது உறவினர். அ.சா.3 முருகேசன் எனது சித்தப்பா ஆவார். 2023ம் வருடம் நான் கர்ப்பமாக இருந்தேன். நானும், எனது கணவரும் திருவாரூரில் இருந்து எனது பிரசவத்திற்காக ஆயிரப்பேரிபுதூரில் உள்ள எனது அப்பா வீட்டிற்கு வந்தோம். எனது அப்பா தங்கை பெயர் இலட்சுமி, லட்சுமியை ராமைய்யா என்பவருக்கு திருமணம் செய்து வைத்துள்ளார்கள். அவர்கள் இருவருக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டு, சுமார் 5 வருடங்களாக பிரிந்து இருந்து வந்தார்கள். லட்சுமிக்கு 2 மகன்கள் இருக்கிறார்கள். அவர்கள் தான் ஆஜர் எதிரி தினேஷ்குமார் மற்றும் சுரேஷ்குமார்.

லட்சுமியையும், ராமைய்யாவையும் ஊர்க்காரர்கள் சமாதானம் செய்து சேர்த்து வைத்துள்ளார்கள். எதிரிகள் அந்த பழைய பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு, 15.01.2023 ம் தேதி, மாலை 06.30 மணிக்கு எனது அண்ணன் மகேஷ், எதிரிகள் வீட்டு வழியாக பைக்கில் போகும் போது, "என்னல வேகமாக போகிறாய்" என்று சொல்லி எதிரிகள் 3 பேரும் எனது அண்ணனின் கன்னத்தில் கையால் அடித்துள்ளார்கள். அப்போது, எனது அண்ணன் மகேஷ், எனது அப்பாவிற்கு போன் மூலம் தகவல் சொல்லியுள்ளார். அதன் பின்னர், எனது அப்பா, எனது கணவர் ஐயப்பன், மாரிச்செல்வம் ஆகியோர்கள் எதிரிகளின் வீட்டிற்கு இரவு 08.15 மணிக்கு போனார்கள். எனது மகேஷை அடித்தது சம்பந்தமாக எனது அப்பா எதிரிகளிடம் எதிரியின் வீட்டில் வைத்து கேட்டபோது, "என்னல தேவடியா பயல்களா தயோலிகளா" என்று எதிரிகள் அனைவரும் சொல்லி எதிரிகள் தினேஷ்குமார், சுரேஷ்குமார் ஆகியோர்கள் வீட்டிற்குள் சென்று அருவாளை எடுத்து வந்து சுரேஷ்குமார் அருவாளால் எனது அப்பாவின் தோள்பட்டையிலும், காது, கன்னத்திலும் வெட்டியுள்ளார். எனது அண்ணன் மாரிச்செல்வத்தை எதிரி தினேஷ்குமார் அருவாளால் தலையின் பின்புறம், வலது கை மணிக்கட்டு, முட்டிப்பகுதியிலும் வெட்டியுள்ளார். அப்போது, மாரிச்செல்வம் மயங்கி விழுந்துள்ளார். அவரை எனது அப்பா தூக்க போனபோது, எதிரி இராமைய்யா கம்பியால் எனது அப்பாவின் தலையில் அடிக்க வந்துள்ளார். அதை எனது அப்பா தடுக்க போன போது இடது கட்டை விரலில் அடிபட்டுள்ளது.

அப்போது, எனது கணவர் ஐயப்பன், லிங்கத்துரை, முருகேசன் ஆகியோர்கள் காயம்பட்ட எனது அப்பா சாமியையும், மாரிச்செல்வத்தையும் ஒரு போக்கு ஆட்டோவில் ஏற்றி தென்காசி அரசு மருத்துவமனைக்கு

கொண்டு சென்றுள்ளார்கள். நான் எனது கணவருக்கு போன் செய்தேன், முதலில் எடுக்கவில்லை. அதன் பின்னர், எனது கணவர் எனக்கு போன் செய்து நடந்த விபரத்தை சொன்னார். அதன் பின்னர் நானும், எனது அம்மாவும் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு எனது அப்பாவுக்கு சிகிச்சை அளித்தார்கள். அப்போது, குற்றாலம் போலீசார் வந்து எனது அப்பாவிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். மாரிச்செல்வத்திற்கு முதலுதவி சிகிச்சை மட்டும் அளித்து விட்டு, மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நடந்த சம்பவத்தை எனது அப்பாவிடம் வாக்குமூலம் வாங்கி போலீசார் படித்து காண்பித்தார்கள். எனது அப்பா கையெழுத்து செய்தார். நான் புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சி கையெழுத்து செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.26 13:48:41 +0530